பெறுநர்.　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　16-07 2014

செயலாளர்,
தமிழ்நாடு மினு உற்பத்தி மற்றும்
பகிர்மானக் கழகம்,
#.144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : நிர்வாகம் – மூன்றாம் நிலை பணித்தொகுப்பு – இ.நி.உ. பொறுப்புக்கு – தொழிற்தகராறு சட்டம் பிரிவு 9 (A) ன் கீழ் முன்னறிவிப்பு கொடுக்காமல் – கல்வித் தகுதியை மாற்றி – உத்திரவு பிறப்பித்துள்ளதை ரத்து செய்யக் கோரிக்கை .

பார்வை : B. P. 25, நாள் – 24-05 2014

பார்வையில் காணும் உத்திரவால் மின்வாரியத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் நியமனத்திற்கு பணிவிதிகள் எண்.94 இணைப்பு 3ல் வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கல்வித் தகுதியான sSS.S.L.C. என்பதை 24-05 2014 முதல் மாற்றி பட்டப் படிப்புகளான B.A., B.Com., B.Sc., B.Com., என்று உயர்கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

1) வாரிசு வேலையில் நாம் கொடுத்ததன் அடிப்படையில் அலுவலக உதவியாளர்களாக நியமனம் செய்யப் பட்டு பின்னர் sSS.S.L.C. தேர்வு பெற்றவர்கள்,
2) ஒப்பந்த கூலிகளாக இருந்து மஸ்தூர்களாக நியமனம் பெற்று பின்னர்s S.S.L.C. தேர்ச்சி பெற்றவர்கள்,
3) S.S.L.C. தேர்ச்சி பெற்றிருந்தும் மஸ்தூர்களாக நியமனம் செய்யப் பட்ட ஒப்பந்தக் கூலிகள் ஆகியோர் தற்போது நடைமுறையில் உள்ள பழக்கப்படி உள்முகத்தேர்வு மூலமாக இளநிலை உதவியாளர் நியமனம் பெறுவது வாரியத்தின் 24-05 2014 தேதியிட்ட உத்திரவினால் தடைசெய்யப் படுகிறது.

இத்தகைய மாற்றங்கள் தொழிற் சங்கங்களோடு பேசி சுமூக முடிவு ஏற்பட்ட பிறகே செய்திட வேண்டும் அல்லது தொழிற்தகராறு சட்டம் 1வது அட்டவணை வரிசை எண் 6ல் வரையறுக்கப் பட்டுள்ள பணிநிபந்தனைக்குள் கல்வித் தகுதி மாற்றமும் வருவதால் சட்டப்பிரிவு 9 (A) ன் படி தொழிலாளர்களுக்கு முன்ன்றிவிப்பு கொடுத்திடவேண்டும்.

மேற்கண்ட இரு நடவடிக்கைகளும், வாரிய உத்திரவு பிறப்பிக்கப் படுமுன் பின்பற்றப் படவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

எனவே வாரியம் தன்னிச்சையாக கல்வித் தகுதி மாற்றங்களை செய்து பிறபித்துள்ள உத்திரவினை ரத்து செய்திடவும், கல்வித் தகுதி மாற்றுவது வாரியத்தின் அவசியத்தேவையெனின் தொழில் உறவு மற்றும் சட்டமுறைகளை பின்பற்றிடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்.

பெறுநர். 31--07 2014

செயலாளர்,
தமிழ்நாடு மினு உற்பத்தி மற்றும்
பகிர்மானக் கழகம்,
#.144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : நிர்வாகம் – மூன்றாம் நிலை பணித்தொகுப்பு – இ.நி.உ. பொறுப்புக்கு கல்வி தகுதி மாற்றம் செய்வது குறித்து.

பார்வை : 1. B. P. 25, நாள் – 24-05 2014..
2).எங்கள் சங்கத்தின் 16-07 2014 தேதியிட்ட கடிதம்.

-- தமிழ்நாடு மின்வாரியத்தில் இளநிலை உதவியாளர்கள் நேரடி நியமனம் மற்றும் உள்முகத் தேர்விற்கு பார்வை 1ன் வாயிலாக கல்வித் தகுதியை மாற்றி பிறப்பித்துள்ள உத்திரவை தடுத்து நிறுத்தி பழைய கல்வித் தகுதியே தொடர வேண்டுமென்று, 20 07 2014 அன்று சென்னையில் நடைபெற்ற எங்கள் சங்கத்தின் 175வது மாநிலச் செயற்குழுவில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் நகலினை இத்துடன் இணைத்துள்ளோம்.

தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து பார்வை 1ல் கண்டுள்ள உத்திரவினை இரத்து செய்து தொழிலாளர்களுக்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்கவேண்டுமென வேண்டுகிறோம்.

நன்றியுடன்,

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்.

இணைப்பு : தீர்மான நகல்.